கழகத் தலைவர்–முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ராமநாதபுரத்தில் பாகமுகவர்களுக்கான பாசறைக் கூட்டத்தில் பங்கேற்க உள்ளார். இந்நிகழ்ச்சியில் அனைத்து பாகமுகவர்களும் பங்கேற்பது குறித்த மதுரை தெற்கு மாவட்டம் திருமங்கலம் தொகுதி பாகமுகவர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் மாவட்ட செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் சிறப்புரையாற்றிய போது எடுத்தபடம். உடன் கழக நிர்வாகிகள் நாகராஜன், ஏர்போர்ட் பாண்டியன்,கே.ஐ.மகிழன்,கொ.தனபாண்டியன், லதாஅதியமான், முத்துராமலிங்கம், கொடி சந்திரசேகர், பாசபிரபு, சிவனாண்டி, ஞானசேகரன், ஆலம்பட்டி சண்முகம், மதன்குமார், ராம மூர்த்தி, தங்கப்பாண்டி, நாக ராஜ், ஸ்ரீதர், செல்வம், ரம்யா முத்துக்குமார், ஆதவன் அதியமான் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், பாகமுகவர்கள் பங்கேற்றனர்

முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொலி காட்சி மூலம் திறந்து வைத்தார்!

இராதாபுரம் தொகுதியில் ரூ.6.86 கோடியில் - புதிய பள்ளி வகுப்பறைகள் திறப்பு விழா!

பேரவைத் தலைவர் மு.அப்பாவு - முன்னணியினர் பங்கேற்பு!

நெல்லை.ஆக.3-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நெல்லை மாவட்டம் இராதாபுரம் சட்டமன்ற தொகுதியில் உள்ள 303 உயர்தர அறிவுத்திறன் வகுப்பறைகளை (Smart Class Rooms) தலைமை செயலகத்திலிருந்து காணொலி காட்சி வாயிலாக 31.7.2023 அன்று திறந்து வைத்தார்கள்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நெல்லை மாவட்டம் இராதாபுரம் சட்டமன்ற தொகுதியில் உள்ள பள்ளிகள் மற்றும் அரசு சார்ந்த கல்வி நிறுவனங்களில் ரூபாய் 6.86 கோடியே செலவில் 303 உயர்தர அறிவுத்திறன் வகுப்பறைகளை தலைமை செயலகத்திலிருந்து காணொலி காட்சி வாயிலாக 31.7.2023 அன்று திறந்து வைத்தார்கள்.அதனைத் தொடர்ந்து நெல்லை மாவட்டம் திசையன்விளை உலக இரட்சகர் மேல்நிலைப்பள்ளியில் காணொலி காட்சி வாயிலாக நடைபெற்ற விழாவில் சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு மாவட்ட ஆட்சியர் மருத்துவர் கா.ப.கார்த்திகேயன், மாவட்ட ஊராட்சி மன்ற தலைவர் வி.எஸ்.ஆர்.ஜெகதீஸ் மற்றும் மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டு சிறப்பித்து முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்தனர்.

பேரவைத் தலைவர் மு.அப்பாவு பேச்சு!

பின்னர் சட்டப் பேரவை தலைவர் மு.அப்பாவு பேசியதாவது.

அரசு பள்ளிகள் மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்கள் தனியார் பள்ளி மாணவர்களுக்கு சமமாக ஆங்கிலத்தில் பயில வேண்டும் என்பதற்காக உன்னத நோக்கத்துடன் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த ஆண்டு ஸ்மார்ட் வகுப்பறைகள் திட்டத்தை தொடங்கி வைத்தார்கள். அதன்படி தமிழ்நாட்டில் பல்வேறு பள்ளிகளில் ஸ்மார்ட் வகுப்பறைகள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது.இத்திட்டத்தின் மூலம் ஆங்கிலத்தை எளிமையாக பயில ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.மேலும் மாணவ, மாணவியர்கள் வருங்காலத்தில் என்ன நிலையை எட்ட வேண்டும் என்ற உன்னத குறிக்கோளுடன் படிக்க வேண்டும்.இன்று இராதாபுரம் சட்டமன்ற தொகுதியில் உள்ள அரசு உதவி பெறும் பள்ளிகளில் 205 திறன் வகுப்பறை களும், (Smart Class Rooms)அரசு பள்ளிகளில் 90 திறன் வகுப்பறைகளும்,ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் மற்றும் கல்வித்துறை அலுவலகங்களில் 8 திறன் வகுப்பறைகளும், கல்லூரிகளில் 3 திறன் வகுப்பறைகளும் என மொத்தம் 306 திறன் வகுப்பறைகள் ரூபாய் 7 கோடியே 11 லட்சத்து 50 ஆயிரம் மதிப்பில் கேமரா மற்றும் யு.பி.எஸ். வசதியுடன் காணொலி காட்சி வாயிலாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள். தமிழகத்தில் முதன் முதலாக ஒரு சட்டமன்ற தொகுதி முழுவதும் ஸ்மார்ட் வகுப்பறைகள் தொடங்கப்பட்டது இராதாபுரம் சட்டமன்ற தொகுதி தான்.

ஸ்மார்ட் வகுப்பறைகள்!

இந்த ஸ்மார்ட் வகுப்பறைகள் மூலம் உயர் தொழில் நுட்பத்தினை பயன்படுத்தி மாணவர்களின் கற்றல், கற்பித்தல் நிகழ்வினை மேம்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.1 முதல் 12 ஆம் வகுப்பு வரை ஸ்போக்கன் இங்கிலீஷ் வகுப்புகள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. 1 முதல் 5 வகுப்பு வரை 30 நிமிடமும் 6 முதல் 8 வரை 30 நிமிடமும் 9 முதல் 12 வரை 30 நிமிடமும் என மூன்று பிரிவுகளாக பிரிக்கப்பட்டு நாள்தோறும் 1/2 மணி நேரம் மாணவர்களுக்கு கற்றல்,கற்பித்தல் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.1 முதல் 12 ஆம் வகுப்பு வரை உள்ள தமிழ்வழி மாணவர்கள் அதிக மதிப்பெண் பெற்றாலும் ஆங்கிலம் பேச முடியாத நிலை உள்ளது.இதன் காரணமாக பல மாணவர்களின் அரசு பள்ளியை விட்டுவிட்டு மெட்ரிக் சி.பி.எஸ்.சி, ஐ.சி.எஸ். போன்ற பள்ளிகளை நோக்கிச் செல்கின்றனர்.மெட்ரிக் பள்ளி பாடத் திட்டமும் அரசு பள்ளியில் உள்ள பாடத்திட்டமும் ஒன்றாக இருந்தாலும் அரசு பள்ளி மாணவர்களால் ஆங்கிலம் சகஜமாக பேச முடியாத,படிக்க முடியாத நிலை இருந்து வருகிறது. ஆண்டுக்கு பல லட்சக் கணக்கில் மெட்ரிக்பள்ளியில் படிக்கும் குழந்தைகளுக்கு அவர்கள் பெற்றோர்கள் செலவு செய்து வருகின்றனர்.அரசு பள்ளிகளில் படிக்கும் மாணவர்கள் பள்ளியில் சேர்வது தொடங்கி பனிரெண்டாம் வகுப்பு முடிக்கும் வரை பள்ளி படிப்புக்கு ஒரு தொகையை வங்கிக் கணக்கில் சேர்த்து வைத்தால் அது 58 லட்சம் முதல் 68 லட்சம் வரை சேமிப்பாக கிடைக்கும் ஆரம்ப, நடுநிலை பள்ளிகளில் இருந்து தொடங்கி ஸ்மார்ட் கிளாஸ் திட்டத்தை படிப்படியாக அனைத்து கல்வி நிறுவனங்களுக்கும் கொண்டு வர வேண்டும் என்பதுதான் முதலமைச்சரின் கனவு திட்டமாக இருந்தது.ஆங்கிலத்தையும் தமிழைப் போல் பேச வேண்டும் என்பது தான் முதலமைச்சர் அவர்களின் எண்ணம் சிந்தனை ஆகும்.ஆசிரியர்களால் மட்டும்தான் நல்ல சமுதாயத்தை உருவாக்க முடியும் என்பதை கருத்தில் கொண்டு முதலமைச்சர் அவர்கள் நல்ல திட்டங்களை பள்ளிகளை நோக்கி கொண்டு வருகிறார்.இந்த வாய்ப்பினை தந்த முதலமைச்சர் அவர்களுக்கு மீண்டும் ஒரு முறை நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் முதல்வன் திட்டம்!

பள்ளிகளில் வழக்கமாக நடைபெறும் கற்றல்,கற்பித்தல் நிகழ்விற்கு எவ்விதபாதிப்பும் இன்றி இந்த ஸ்போக்கன் இங்கிலீஷ் வகுப்புகள் நடத்தப்படும். இதனை கண்காணிக்க முதன்மை கல்வி அலுவலர்,கோட்டக்கல்வி அலுவலர்,வட்டார கல்வி அலுவலர், தாளாளர் மற்றும் கல்வி அலுவலர்களுக்கு 8 ஸ்மார்ட் டிவி வழங்கப்பட்டுள்ளது.புதுமைப்பெண் திட்டத்தின் மூலம் உயர் கல்வி பயிலும் மாணவிகளுக்கு மாதந்தோறும் ரூபாய் 1000, வழங்கப்பட்டு வருகிறது.அரசு பள்ளிகளில் பயிலும் மாணவிகள், உயர்கல்வி பயில வேண்டும், என்பதுதான் இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் ஆகும்.இத்திட்டம் சிறப்பாக தமிழ்நாடு முழுவதும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

"நான் முதல்வன்" திட்டத்தின் கீழ் உயர்கல்வி பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு சிறந்த வல்லுனர்களை கொண்டு பல்வேறு பயிற்சிகள் மற்றும் ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருகிறது.தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கல்வியை உலக தரத்திற்கு கொண்டு செல்ல வேண்டும் என்பதற்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். தாமிரபரணி கூட்டு குடிநீர் திட்டத்திற்காக 605 கோடி நிதி ஒதுக்கீடு செய்து அப்பணிகள் நடைபெற்று வருகிறது.

விஜயாபதி தாமஸ் மண்டபம் அருகில் உலக தரம் வாய்ந்த விளையாட்டு மைதானம் அமைக்கப்பட உள்ளது.முன்னாள் முதலமைச்சர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் நதிநீர் இணைப்பு திட்ட பணிகளை கொண்டு வந்தார்கள்.அப்பணிகள் கடந்த 10 ஆண்டுகாலமாக கிடப்பில் போடப்பட்டது.அதன் பின்னர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதவி ஏற்ற பிறகு நதிநீர் இணைப்பு திட்ட பணிகளுக்காக ரூபாய் 899 கோடி ஒதுக்கீடு செய்து விரைந்து முடிக்க உத்தரவிடப்பட்டு பணிகள் ஓரிரு மாதங்களில் முடியும் தருவாயில் உள்ளது.

முதலமைச்சர் அவர்கள் மக்களுக்காக பல்வேறு சிறப்பான திட்டங்களை கொண்டு வருகிறார்கள். ஏழைகளை பற்றி சிந்திக்கும் அரசாக உள்ளது.

நீங்கள் அனைவரும் இந்த அரசுக்கு நன்றி உடையவர்களாக இருக்க வேண்டும்.இன்று இராதாபுரம் சட்டமன்ற தொகுதி முழுவதும் ஸ்மார்ட் வகுப்பறைகளை தொடங்கி வைத்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு இப்பகுதி மக்களின் சார்பாகவும்,பள்ளி மாணவ, மாணவியர்கள் சார்பாகவும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு சட்ட பேரவை தலைவர் மு.அப்பாவு பேசினார்.

அதன் பின்னர் பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டியை சட்டபேரவை தலைவர் மு.அப்பாவு வழங்கினார்.

இந்நிகழ்வில் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் சின்னராசு,தலைமை செயற்குழு உறுப்பினர் சித்திக், பொதுக்குழு உறுப்பினர் பரமசிவம் ஐயப்பன்,ஒன்றிய செயலாளர்கள் ஜோசப் பெல்சி, ராஜன்,மாவட்ட ஊராட்சி உறுப்பினர்கள் சாலமோன் டேவிட், பாஸ்கர்,ஜான்ஸ் ரூபா,லிங்க சாந்தி, மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் மல்லிக அருள்,பங்குத்தந்தை டக்லஸ், ஸ்மார்ட் வகுப்பறைகள் அமைத்து தந்த நிறுவனத் தலைவர் துரை கந்தசாமி, உட்பட கழகத்தினர், அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள், மாணவ,மாணவியர்கள் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

நாகர்கோவில் மாநகராட்சியில் பாதாள சாக்கடை மூலம் பெறப்படும் தண்ணீர் வலம்புரிவிளையில் சுத்திகரிக்கப்பட்டு விவசாய பாசன வசதிக்காக தெங்கம் புதூர் சானலில் விடப்படுகிறது.இதற்கான ஆய்வில் மாவட்டச் செயலாளர் – மேயர் ரெ.மகேஷ் கலந்து கொண்டார். உடன் மாநகர ஆணையர் ஆனந்த்மோகன், செயற்பொறியாளர் பாலசுப்பிரமணியம், மாமன்ற உறுப்பினர்கள் விக்ரமன், சகாய ஸ்டாலின், அனிலா, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வக்கீல் அகஸ்தீசன், மாநகர இளைஞரணி அமைப்பாளர் சிடி சுரேஷ் மற்றும் கழகத்தினர் பங்கேற்றனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

என்.வி. நடராசன்
ஆகஸ்ட் 3 (1975)



சென்னை மாவட்டக் கழகத்தின் முதலாம் செயலாளர். கழகச் சட்டதிட்டங்களை உருவாக்குவதற்கு அமைக்கப்பட்ட சட்டதிட்டத் திருத்தக்குழுவின் முதல் செயலாளர், கழகத்தின் முதல் அமைப்புச் செயலாளர் மற்றும் தி.மு.கழகத்தில் மிக நீண்டகாலம் தலைமை நிலையச் செயலாளராக இருந்தவர் என்ற பெருமைக்குரியவர்.

அதுமட்டுமல்லாமல், கலைஞர் அவர்கள் முதல்வர் பொறுப்பேற்ற பிறகு, இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் புதுமை என்ற புகழ் பெற்ற 'பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை' அமைந்தபோது, அதன் அமைச்சராக முதலில் பதவி வகித்தவரும் இவர்தான்.

'திராவிடன்' என்ற இதழை துவக்கி கழகத்தின் போர்முரசமாய் அதை நடத்தி வந்தார்.

இந்தி எதிர்ப்பு, விலைவாசி உயர்வு உள்ளிட்ட பல அறப்போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைவர் கலைஞர் அவர்கள் "நமது தி.மு.கழக மாலடோவ் என்.வி.என்" என பெருமைப்படக்கூறியது குறிப்பிடத்தக்கது.

தலைமைக் கழகம்
தி.மு.க.

தமிழ்நாடு முதலமைச்சர் – தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் இராமநாதபுரம் வருகையை முன்னிட்டு விழா நடக்க இருக்கும் இடத்தினை இராமநாதபுரம் மாவட்ட கழக செயலாளர் காதர்பாட்சா முத்துராமலிங்கம், எம்.எல்.ஏ. ஆய்வு செய்தார். உடன் இராமநாதபுரம் நகர் மன்ற தலைவர் ஆர். கே. கார்மேகம், துணைத் தலைவர் டி. ஆர். பிரவீன் தங்கம், போகலூர் ஒன்றிய செயலாளர் வழக்கறிஞர் கே .கதிரவன், மண்டபம் ஒன்றிய செயலாளர் முத்துக்குமார், இராமநாதபுரம் ஒன்றிய பெருந்தலைவர் கே. டி .பிரபாகரன், டாக்டர் பி .கே. குமார் மற்றும் கட்சி நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

முத்தமிழறிஞர் கலைஞரின் 5ஆம் ஆண்டு நினைவேந்தல்!

திண்டுக்கல் கிழக்கு - மேற்கு மாவட்டங்களில் கலைஞர் திருவுருவப்படத்திற்கு அஞ்சலி!

மாவட்டக் கழகச் செயலாளர்கள் - அமைச்சர் அர.சக்கரபாணி-ஐ.பி.செந்தில்குமார் அறிக்கை!

திண்டுக்கல், ஆக. 3-

திண்டுக்கல் மாவட்டச் செயலாளர்கள் அர.சக்கரபாணி, ஐ.பி.செந்தில்குமார் அறிக்கை வருமாறு:

உலகேபோற்றும் பன்முகப் படைப்பாளியாக,முன்னேற்ற உணர்வோடு கலந்து, காலம் போற்றும் காவியமாக என்றும் வரலாற்றில் நிலைத்தப் பதிவாகசமூகநீதி,மக்களின் முன்னேற்றம்,சாதிப் பிரிவினைகள் அகற்றம்,தீண்டாமை ஒழிப்பு, வறுமை ஒழிப்பு, நடுத்தரமக்களுக்குநலத்திட்டங்கள் உள்ளிட்ட பல் வேறு திட்டங்களை அறிமுகம் செய்துமக்களின் மனதைக் கொள்ளை கொண்டவர். பன்முகச் சிறப்பு வாய்ந்த அவர் அகில இந்தியஅரசியல் தலைவர்களால் கவரப்பட்டவர்.

பொதுமக்களின் பிரச்சினைகளுக்கு முறையாகத் தீர்வுகாணக்கூடியவராக, எப்பேர்ப்பட்டகடினமான சிக்கல் வாய்ந்த பிரச்சினைகளாக இருந்தபோதும் அதைத் தீர்த்து வைக்கக் கூடியவராகதலைவர் கலைஞர்அவர்கள் விளங்கினார்கள். எல்லாவற்றிற்கும் மேலாகஅனைத்துமுதலமைச்சர்களுக்கும்,பல்வேறு கட்சித் தலைவர்களுக்கும் முன்மாதிரியாக, ரோல் மாடலாக, தலைவர் கலைஞர் அவர்கள் இருந்துள்ளார்கள்.

முத்தமிழின் முகவரியாக, புகழ்ச்சின்னமாக ஒளிவீசும் தலைவர்கலைஞர்அவர்களின் ஐந்தாம் ஆண்டுநினைவேந்தல் நிகழ்வாக 07.08.2023,திங்கட்கிழமை அன்றுதிண்டுக்கல் கிழக்கு மற்றும் மேற்குமாவட்டங்களில் உள்ள அனைத்து மாநகரம், பகுதி, ஒன்றிய, நகர,பேரூர்கழகங்கள்,வார்டுமற்றும் கிளைக் கழகங்கள் தோறும் அனைத்து இடங்களிலும் முத்தமிழறிஞர் தலைவர்கலைஞர்அவர்களின் திருவுருவப்படத்திற்குமாலை அணிவித்து மலரஞ்சலி செய்துவீரவணக்கம் செய்திட வேண்டுமாய்அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

சென்னையில் போக்குவரத்து மாற்றம்!

சென்னை, ஆக.3-

சென்னையில் சுதந்திர தினவிழா ஒத்திகை நிகழ்வுக்காக ஆகஸ்ட் 4, 10, 13 ஆகிய தேதிகளில், போக்கு வரத்து மாற்றம் செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. காலை 6 மணி முதல் ஒத்திகை முடியும் வரை வாகனங்கள் மாற்றுப்பாதையில் மாற்றிவிடப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் 76 வது சுதந்திர தினவிழா வருகின்ற ஆகஸ்ட் 15ஆம் தேதி கொண்டாடப்பட உள்ளது. சென்னை கோட்டை கொத்தளத்தில் சுதந்திர நாள் நிகழ்ச்சியில் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் தேசியக் கொடியை ஏற்றி வைக்க உள்ளார்.

சுதந்திர தினவிழாவை ஒட்டி காவல்துறை மற்றும் பல்வேறு துறைகளின் சார்பில் அணிவகுப்பு நிகழ்ச்சிகள் நடைபெறுவது வழக்கம். இதற்காக சில நாள்களுக்கு முன்னரே ஒத்திகை நிகழ்ச்சி நடைபெறும்.

இந்நிலையில், 76 வது சுதந்திர தினவிழா ஒத்திகை நிகழ்ச்சிகள் ஆகஸ்ட் 4 ,10, 13 ஆகிய தேதிகளில் நடைபெற உள்ளதாக கூறப்படுகிறது.

இதனால், ஆகஸ்ட் 4 ,10, 13 ஆகிய தேதிகளில் போக்குவரத்துமாற்றம் செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. நேப்பியர் பாலம் முதல் போர் நினைவுச் சின்னம் வரையிலான சாலை, காமராஜர் சாலை, ராஜாஜி சாலை, கொடிமரச்சாலையில் போக்குவரத்துக்கு தடை விதிக்கப்படும் என போக்குவரத்து காவல் துறை சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மதத்தின் பெயரிலான வன்முறையை பொறுத்துக் கொள்ள இயலாது!

மல்லிகார்ஜுன கார்கே எச்சரிக்கை!

புதுடெல்லி, ஆக.3-

இந்தியாவில், 21ஆம் நூற்றாண்டில் மதத்தின் பெயரால் நடக்கும் வன்முறையை பொறுத்துக் கொள்ள முடியாது என காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே தெரிவித்துள்ளார்.

காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே கூறியதாவது:-

இந்தியாவில் மதத்தின் பெயரால் நடக்கும் வன்முறையை பொறுத்துக் கொள்ள முடியாது என்றும், இதுபோன்ற பிளவுபடுத்தும் சக்திகளுக்கு எதிராக மக்கள் ஒன்றுபடாவிட்டால், அதன் விளைவுகளை வரும் தலைமுறையினர் அனுபவிக்க நேரிடும் என்றும் காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே தெரிவித்துள்ளார்.

மேலும் அண்மையில் ஹரியானாவில் நடக்கும் வன்முறை மற்றும் ஆர்.பி.எஃப் கான்ஸ்டபிள் துப்பாக்கிச் சூடு மனதில் ஆழமான வலியை ஏற்படுத்துகிறது எனவும் அவர் தெரிவித்தார்.

தொடர்ந்து, "சமூகத்தின் கட்டமைப்பில் காணப்படும் சிதைவின் போக்கு, அதிகார பேராசையில் சமூகத்தில் வெறுப்பை பரப்புவதன் விளைவு" என்று தெரிவித்தார். மேலும், "பொது மக்களுக்குள் பகைமையின் விஷத்தைக் கலந்து, ஒருவரையொருவர் சண்டையிட வைப்பது நமது அரசியல் அமைப்பை கேலி செய்வது போன்றது" என்றார்.

ஹரியானாவில் நுஹ் பகுதியில் நிகழ்ந்த வன்முறையில் 4 பேர் கொல்லப்பட்டனர். குருகிராமில் உள்ள மசூதி ஒன்றுக்கு தீ வைக்கப்பட்டது. இமாம் ஒருவர் கொல்லப்பட்டார்.

இதனால் அங்கு பதற்றம் நிலவுகிறது. ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தேனி தெற்கு மாவட்டம் ஆண்டிபட்டி அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் பன்னிரண்டாம் வகுப்பு பயிலும் மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகளை ஆண்டிபட்டி சட்டமன்ற உறுப்பினர் மகராஜன் வழங்கினார். உடன் முதன்மை கல்வி அலுவலர் இந்திராணி, பொறுப்பு தலைமை ஆசிரியர் பாலகுரு, பெற்றோர், ஆசிரியர் சங்கத் தலைவர் மீனாட்சி சுந்தரம், மாநில நெசவாளர், அணி துணை அமைப்பாளர் ராமசாமி, பேரூராட்சி தலைவர் சந்திரகலா பொன்னுத்துரை, பேரூர் செயலாளர் சரவணன், கவுன்சிலர்கள் சரவணன் சின்னன், சுரேஷ் பாண்டி மற்றும் ஆசிரியர்கள் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.